**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/97** **2024.09.19**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

### சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்புக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அரச அலுவலர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு விடுக்கும் செய்தி

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு, 2024 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும். இத்தேர்தல் பணி பற்றிய பொறுப்பு, தேர்தலை பக்கச்சார்பின்றியும் திறம்படவும் நடாத்துவது பற்றிய கௌரவமான வரலாறொன்றைக் கொண்ட அரச ஊழியர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலின்போது தமக்குரிய செயற்பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றும் பொருட்டு அரசிடமிருந்து நாளாந்த ஊதியம் பெறுகின்ற அமய உதவியாளர்கள் முதல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வரை தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அரச ஊழியர் ஒவ்வொருவரும் தனது செயற்பொறுப்பு குறித்த சிறந்த புரிந்துணர்வுடனும் கூர்ந்த கவனத்துடனும் எவருக்கும் விசேட கவனிப்பை வழங்காமலும் பக்கச்சார்பின்றியும் செயலாற்றுவார்கள் என்று தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

தேர்தல் நடைபெறும் தினத்தில் வாக்காளர் ஒவ்வொருவரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பொறுப்பு பற்றி நம்பிக்கை வைத்துள்ளனர். தேர்தலின் போது உங்களுக்குரிய செயற்பொறுப்பு குறித்து கருதும்போது, குறிப்பாக தேர்தல் நடைபெறும் காலப்பகுதியினுள் வாக்காளர்களுடனும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடனும் அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுடனும் தாங்கள் நட்புறவுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடன் செயலாற்றும்போது தயவுசெய்து அர்த்தமுள்ள விதத்திலும் தயவன்புடனும் சகிப்புத்தன்மையுடனும் செயலாற்றவும். இவ்வாறான ஒரு காலகட்டத்தில் திறம்படவும் சுறுசுறுப்பாகவும் பரஸ்பர தொடர்பைப் பேணும்போது சாமர்த்தியமும் இங்கிதமும் தொழில்சார் அடக்கமும் இன்றியமையாப் பண்புகளாக விளங்குகின்றன.

தேர்தலொன்றின்போது ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட கடமையை சிறப்பான முறையில் நிறைவேற்றுவதற்கு அரச அலுவலர்கள் என்ற ரீதியில் இந்நாட்டின் வாக்காளர்களுக்கு நாம் கடப்பட்டுள்ளோம். தேர்தல் ஆணைக்குழுவுக்கும் நீதிமன்றத்துக்கும் மாத்திரமே நீங்கள் பொறுப்புக் கூற வேண்டும். எவருக்கும் விசேட கவனிப்பை வழங்க வேண்டாம். உமது கடமை ரீதியான பக்கச்சார்பின்மையானது தீர்மானகரமானதாக இருக்கும். ஆகையால், வாக்காளர்கள் அரச அலுவலர்களிடமிருந்து எதிர்பார்க்கின்ற செயற்பொறுப்பை உயர்ந்தபட்சம் நிறைவேற்றுவோம். அதன்மூலம் சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு சூழலில் தமது மனச்சாட்சிக்கு ஒப்ப வாக்களிக்கும் வாய்ப்புள்ளது என்பதை பொதுமக்கள் கண்டுகொள்வதுடன் மாத்திரமன்றி அதனைப் புரிந்துகொள்வார்கள்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)